# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இளைஞர் படைச் சட்டம்

---

(2002, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, ஒற்றோபர் மாதம் 04 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 9.25 | தபாற் செலவு : ரூபா 4.50

## 2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க,
## இளைஞர் படைச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஒ. 47/2002
4702

**இளைஞர் படையொன்றைத் தாபிப்பதற்கும் : இளைஞர் விவகாரங்களுக்கான சபையொன்றை நிறுவுவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இளைஞர் படைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### இளைஞர் படையின் சபை

*இளைஞர் படையின் சபையைத் தாபித்தல்.*

2. (1) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இளைஞர் படையின் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் ; இது. அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இவர்களுள் ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும் ; அமைச்சர் அவர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராகப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். இளைஞர் அபிவிருத்தி, தொழில் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் அறிவும் அனுபவமும் உடைய ஆட்களிடையேயிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையின் நிருவாகம் தொடர்பிலான எல்லாக் கருமங்களும் விதித்துரைக்கப்பட்டவாறானதாகவிருத்தல் வேண்டும்.

(3) சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.

(4) தொழிற்பயிற்சி, இளைஞர் அபிவிருத்தி மற்றும் நிலைப்படுத்தல் ஆகிய நோக்கத்திற்காகச் சபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கு அவசியமானவாறான மூன்று குழுக்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். சபையானது அதன் தத்துவங்களை அத்தகைய குழுக்களுக்குக் கையளிக்கலாம்.

2-H 016443-700 (2002/07)

(5) அத்தகைய குழுக்களின் அமைப்பும் மற்றும் அத்தகைய குழுக்களினாற் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையும் விதித்துரைக்கப்பட்டவாறானதாகவிருத்தல் வேண்டும்.

படையின் குறிக்கோள்கள்.

3. படையானது, இளைஞர்களுக்கான இராணுவம் சாரா ஒழுங்கமைப்பொன்றாக இருத்தல் வேண்டும் ; குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) இளைஞர் அபிவிருத்தியும் தொழில்வாய்ப்புப் பயிற்சியும் ; அத்துடன்

(ஆ) வாழ்க்கைத் தொழில்சார் கல்வி.

சபையின் தத்துவங்கள்.

4. சபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இளைஞர் படைக்கான திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தல் ;

(ஆ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறு, (அ) என்னும் பந்தியின்கீழ்த் தயாரிக்கப்பட்ட அத்தகைய திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துவதனைக் கண்காணித்தலும் மற்றும் அதன் மீது அறிக்கையிடுதலும் ;

(இ) இளைஞர் படையின் உறுப்பினர்களது பயிற்சியை மேற்பார்வை செய்தல் :

(ஈ) படையின் பணிப்பாளரது கலந்தாலோசனையுடன், படை உறுப்பினர்களின் பயிற்றுவித்தல், திறமை என்பன தொடர்பான நிபந்தனைகளையும் மற்றும் தமது உறுப்பினர் ஒருவரினால் எய்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் தேர்ச்சியின் அளவையும் குறித்துரைத்தல்.

## பாகம் II

### இளைஞர் படை

இளைஞர் படை.

5. (இதனகத்துப்பின்னர் "படை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இளைஞர் படை என அறியப்படவேண்டிய படையொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திரட்டப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்

படையின் கூறு எண்ணிக்கையினை அமைச்சர் தீர்மானித்தல்.

6. (1) படையானது, அமைச்சர் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய கூறுகளாக அமைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எண்ணிக்கையிலானோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) படையின் கட்டமைப்பும், பதவிவரிசைகளும் அத்துடன் அத்தகைய பதவிவரிசைகளுக்கும் மற்றும் அவற்றிலிருந்தும் செய்யப்படும் நியமனங்களும், பதவியுயர்வுகளும், பதவிக்குறைப்புகளும் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

படையின் பணிப்பாளர்.

7. அமைச்சர், படையின் பணிப்பாளராகத் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும் ; அவர் படையின் நிருவாகம், பயிற்சி, ஒழுக்காறு, திறமை என்பவற்றுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

படையின் பணிப்பாளரது கடமைகள்.

8. படையின் பணிப்பாளர் —

(அ) சபையின் முடிபுகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டுமென்பதுடன், சபையின் முடிபுகளுக்குப் பயன் கொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும் ;

(ஆ) சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதற்குத் தேவைப்படக்கூடியவாறாக அத்தகைய தகவலைச் சபைக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

அமைச்சர் அலுவலர்களை நியமித்தல்.

9. படையின் அலுவலர்கள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

படையில் சேவையாற்றுவதற்கு ஏனைய அலுவலர்கள் முதலியோரை மாற்றுச் சேவைக்கு விடுதல்.

10. இளைஞர் அபிவிருத்தி மற்றும் தொழில்வாய்ப்புப் பயிற்சி ஆகிய துறைகளில் விசேட திறமைகொண்ட ஆயுதந் தாங்கிய படைகளின், பொலிசுப் படையின், பகிரங்க சேவையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் எவரேனும் உறுப்பினர், முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் படையிலான மாற்றுச்சேவைக்கு விடப்படலாம் என்பதுடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தோராகவிருத்தலும் வேண்டும்.

படையில் தன்னிச்சையான ஆட்சேர்ப்பு.

**11.** பணிப்பாளரானவர், அமைச்சரின் அங்கீகாரத்துடன், கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்மூலம், முது உறுப்பினராகப் படையில் தன்னிச்சையான சேவையைப் புரிவதற்கெனப் பதினெட்டு வயதுக்குக் குறையாதவர்களும் அத்துடன் இருபத்தெட்டு வயதுக்கு மேற்படாதவர்களுமான ஆட்களை அழைக்கலாம். இப்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாட்களுக்கு ஏற்புடையதாகவேண்டுமோ அத்தகைய ஆட்களைத் தெரிவு செய்யும் முறையானது விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

சேர்த்தற் காலப்பகுதி முடிவுற்றதன் மேல் முது உறுப்பினர்கள் விடுவிக்கப் படுதல்.

**12.** முது உறுப்பினர் ஒருவர், அவர் எக்காலப் பகுதிக்குச் சேர்க்கப்பட்டாரோ அக்காலப்பகுதி முடிவுற்றதன்மேல், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய, படையிலிருந்து விடுவிக்கப்படலாம். அவ்வாறு விடுவிக்கப்பட்ட முது உறுப்பினர் ஒருவர் அவசியமானவிடத்து, அதன் சார்பில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின் நியதிகளின்படி சேர்த்துக்கொள்ளப்படலாம்.

படையின் முது உறுப்பினர்களின் ஒழுக்காறு.

**13.** (அ) அதிகாரிக்கு வேண்டுமென்று பணியாமையைக் காட்டுகின்ற அத்தகைய முறையில், அலுவலரொருவரினால் நேரடியாக அவருக்குக் கொடுக்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட ஏதேனும் சட்டமுறையான ஆணைக்குக் கீழ்ப்படியாதவரான ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது ஒழுங்குவிதியை மீறுகின்றவரான அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரான,

எவரேனும் முது உறுப்பினருக்கெதிராக, விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய முறையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

படையின் அலுவலர்களினதும் முது உறுப்பினர்களினதும் படிகளை அமைச்சர் தீர்மானித்தல்.

**14.** அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், படையின் அலுவலர்களினதும் முது உறுப்பினர்களினதும் ஊதியத்தையும் மற்றும் ஏனைய படிகளையும் தீர்மானிக்கலாம்.

படையின் ஆதனம். படையின் பணிப் பாளருக்கு உரித்தாக்கப் படுதல்.

15. படையின் தனிப்பட்ட உறுப்பினர்களின் ஆதனம் அல்லாத, படைக்குச் சொந்தமான எல்லா ஆதனமும் படைக்கு அல்லது படையின் ஏதேனும் பாகத்துக்கு வருமதியான பணங்களையும் ஏனைய ஆதனத்தையும் அறவிடுவதற்கும் மற்றும் வழக்குத் தொடுப்பதற்கும் ஆன புறநீங்கலான உரிமையும் அப்போதைக்கான படைப் பணிப்பாளருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ; அவர், வழக்குத் தொடுப்பதற்கும், ஒப்பந்தங்களையும் உரிமை மாற்றங்களையும் செய்வதற்கும் மற்றும் அத்தகைய ஆதனம் தொடர்பாக மற்றெல்லாச் சட்டமுறையான காரியங்களைச் செய்வதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும் ; அத்துடன் இப்பிரிவின் பயனைக்கொண்டு படையின் பணிப்பாளரினால் எடுக்கப்பட்ட எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள், அவர் இறப்பதன், பதவி விலகுவதன் ஓய்வு பெறுவதன் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் காரணமாக நிறுத்தப்படுதலாகாது என்பதுடன், தணிந்துபோதலுமாகாது; ஆனால் பதவியில் அவரை அடுத்துறுபவரினாலும், அடுத்துறுபவரின் பெயரிலும் கொண்டுநடாத்தப்படலாம்.

அமைச்சரவையின் தத்துவங்கள்.

16. (1) அமைச்சரவையானது, ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், நியதிச் சட்டமுறையான குழுவின் அல்லது வேறேதேனும் அரசாங்க நிறுவனத்தின் சாதாரணச் செயற்பாடுகளின் பாகமாக அமைகின்ற அத்தகைய சேவைகளைப் படைக்கு அளிக்குமாறு அத்தகைய திணைக்களத்தை, கூட்டுத்தாபனத்தை, சபையை அல்லது நிறுவனத்தைப் பணிக்கலாம்

(2) அமைச்சரவையானது, அத்தகைய சேவைகள் எந்த முறையில் அளிக்கப்படவேண்டுமோ அந்த முறையைக் கவனத்துட் கொள்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான குழுக்களை நியமிக்கலாம். அமைச்சரவையானது, அத்தகைய குழுக்களின் பணிகளையும் அத்துடன் அத்தகைய குழுக்களினாற் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கை முறையையும் தீர்மானித்தல் வேண்டும்

## பாகம் III

### பொது

கணக்குகளும் கணக்காய்வும்.

17. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையானது படையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

18. (1) இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் மற்றும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் மற்றும் அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சரானவர், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவை எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :–

(அ) உறுப்பினர்களின் நியமனம், படையின் ஒழுங்குபடுத்துகைக் கட்டுப்பாடு, நிருவாகம் அத்துடன் ஒழுக்காறு ;

(ஆ) படை உறுப்பினர்களினால் அணியப்படவேண்டிய சீருடைகள் ;

(இ) முது உறுப்பினர்களுக்கான பயிற்சி ;

(ஈ) படையின் ஏதேனும் கூறின் முழுமையையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கலைத்துவிடுதல் ;

(உ) முது உறுப்பாண்மைக்கான வயதும் மற்றும் ஏனைய தகைமைகளும், முது உறுப்பினர்களின் பதவி வரிசையிலான பதவியுயர்வு, முன்னேற்றம் அல்லது குறைப்பு ; அத்துடன் முது உறுப்பினர்களின் சேவைகளைத் தேவைப்படுத்தாதுவிடுதல் ;

(ஊ) முது உறுப்பினரல்லாத படையின் எவரேனும் உறுப்பினரின் சேவையை முடிவுறுத்தல் ;

(எ) சபையினால் நியமிக்கப்படவேண்டிய குழுக்களை அமைத்தலுக்காகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் மற்றும் அதன் அமைப்பும்;

(ஏ) எந்தக் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்தக் கருமம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருத லும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று எத்தேதியன்று நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப் பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

19. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக — *பொருள் கோடல்.*

"இளைஞர்" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறையாதவரும் அத்துடன் இருபத்தெட்டு வயதுக்கு மேற்படாத வருமான ஆளொருவர் என்று பொருளாகும்.

20. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்குதல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.